யாழ்ப்பாணம்
நல்லூர் இளநூலகம்.

# ★ வடபகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பம்!

விலை ரூபா 5. 00

ஈழநாடு
EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 03 இதழ் 133
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 17 - 6 - 1995

[கொழும்பு]
வடபகுதி மீதான பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

நேற்றுக் காலை பலாலி இராணுவ முகாமிலிருந்து படை

(6ம் பக்கம் பார்க்க)

## சுப்பசொனிக் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
நேற்றுக்காலை 6.30 மணியளவில் யாழ் குடாநாட்டு வான் பரப்பிற்குள் நுழைந்த இரு சுப்பசொனிக் விமானங்கள் அச்சுவேலியை அண்டிய பகுதிகளை நோக்கி குண்டுத்

(6ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி நோக்கியும் ஷெல் தாக்குதல்

(வடமராட்சி)
அச்சுவேலிப் பகுதியில் நடைபெற்ற மோதலின் போது பலாலி, வளலாய் இராணுவத்தினர் வல்லை, மண்டான் போன்ற பகுதிகளை நோக்கியும் நேற்று ஷெல் தாக்குதலை நடத்தினர்.

மேலும் இத்தாக்குதலில் வல்லை வீதியூடான சகல போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டன. 51

### ★ அச்சுவேலி பகுதியை நோக்கிய

# இராணுவ முன்னேற்ற முயற்சி

# விடுதலைப்புலிகளால் முறியடிப்பு

[யாழ்ப்பாணம்]

**பலாலிப் பகுதியிலிருந்து நேற்றுக்காலை ஷெல் தாக்குதல்களை நடத்தியவாறு டாங்கிகள், புல்டோசர்கள். கனரக வாகனங்கள் சகிதம் அச்சுவேலியை நோக்கி இராணுவத்தினர் மேற்கொண்ட முன்னேற்ற நடவடிக்கை விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது,**

நேற்றுக்காலை 6-00மணிக்கு அச்சுவேலி செல்வநாயகபுரம் ஊடாக நவக்கிரி தோப்பு பகுதிக்கும் பத்தமேனி ஊடாக அச்சுவேலிப் பகுதிக்கும், தொண்டமானாறுபகுதிக்கும், மூன்று முனைகளில் இராணுவம் முன்னேறிய வேளையே விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

டாங்கிகள் சகிதம் ஷெல், மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டவாறு இராணுவம் மும்முனைகளில முன்னேறியது:

மும்முனைகளையும் எதிர் கொண்ட விடுதலைப்புலிகள் எதிர்த்தாக்குதலைமேற்கொண்டனர் சுமார் 8 மணித்தியாலங்கள் தொடர்ந்து இடம்

[6ம் பக்கம் பார்க்க]

## இராணுவத் தரப்பில் ஒருவர் பலி; ஒருவர் காயம்

(கொழும்பு)
அச்சுவேலிப் பகுதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது இராணுவ தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் ஒருவர் காயமடைந்ததாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

புலிகளின் எதிர்த் தாக்குதலினல் அச்சுவேலியில் படையினருக்கு பலத்த இழப்பு ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிய வருகிறது.

இதேவேளை இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. க ரி

## காலையிலிருந்து கடும்ஷெல் தாக்குதல் ஒருவர் பலி; 15 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
பலாலி இராணுவமுகாமிலிருந்து நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் வரை அச்சுவேலி பகுதியை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இச்ஷெல்களில் பல அச்சுவேலியில் பொதுமக்கள் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இந்த ஷெல் தாக்குதலினல் ஒருவர் பலியானர். 15 பேர் காயமடைந்தனர்,

(6ம் பக்கம் பார்க்க)

## நீர்வேலி அத்தியாரில் ஆயிரம் பேர் தஞ்சம்

[யாழ்ப்பாணம்]
அச்சுவேலியில் நேற்று இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினல் அகதிகளாக வெளியேறிய மக்களை தஞ்சமடைய வைக்க நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் அகதிமுகாம் அமைக்கப்பட்டுள்ளது.

றெட்பாணவின் ஏற்பாட்டில் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள இந்த அகதி

(6-ம் பக்கம் பார்க்க)

## பத்தாயிரம் பேர் இடம்பெயர்ந்தனர்

(யாழ்ப்பாணம்)
அச்சுவேலியில் நேற்று இடம்பெற்ற இராணுவ தாக்குதலின்போது பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்துள்ளனர்.

அச்சுவேலி, நவக்கிரி அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இடம்பெயர்ந்தவர்களாவர்.

இடம் பெயர்ந்த பெருமளவான மக்கள்நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரி, கோப்பாய் றோமன் கத்தோலிக்க தேவாலயம் போன்ற இடங்களில் தங்கியுள்ளனர்.

சிறுப்பிட்டி, நீர்வேலிகோப்பாய்போன்ற பகுதிகளிலுள்ள ஆலயங்களிலும், உறவினர். நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளவர்களுக்கு றெட்பாண, செஞ்சிலுவைச் சங்கம்என்பன கோப்பாய் உதவி அரச அதிபரின் மேற்பார்வையில் உணவுகளை உடனடியாக வழங்கின.

166 - 90 51.ரி

## மின்னல் நடவடிக்கை

(கொழும்பு)
பலாலி இராணுவத்தினர் நேற்று 'மின்னல் தாக்குதல்' நடவடிக்கையை மேற்கொண்டதாக பாதுகாப்பு உயர் பீடம் நேற்றுத் தெரிவித்தது.

இத்தாக்குதல் அச்சுவேலிப் பகுதியை நோக்கி நேற்று ஆரம்பிததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. க.ரி

## அரசு தரப்பு பொய்யான தகவல்

(யாழ்ப்பாணம்)
வெற்றிகரமாக இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு இராணுவத்தினர் அச்சுவேலியைக் கைப்பற்றி அவ்விடத்தைப் பலப்படுத்தி வருவதாகவும் இந்நடவடிக்கை தொடர்வதாகவும் முற்றிலும் பொய்யான தகவலை சிறிலங்கா அரசு வெளியிட்டுள்ளதாக புலிகளின் குரல் தெரிவித்தது.

இதேவேளை நேற்று ஆரம்பிக்கப்பட்ட தாக்குதல் இத்துடன் நிறுத்தப்படுமா அல்லது தொடருமா என்பது குறித்து எதுவும் அறியமுடியாமலிருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இத் தாக்குதல் குறித்து நேற்று கொழும்பில்பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது ஆனல் அங்கு இந்த நடவடிக்கை எதுவரை தொடருமென்பதற்கானபதில் தெரிவிக்கப்படவில்லையெனவும் தெரியவருகிறது. கி-ரி

## மாணவிபடுகாயம்

(யாழ்ப்பாணம்)
ஆனைபிறவு இராணுவமுகாமிலிருந்து கிளிநொச்சி மக்கள் குடியிருப்புகள் மீது கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட சரமாரியான ஷெல் தாக்குதலில் மாணவி ஒருவர் படுகாயமடைந்தார்

காயமடைந்த மாணவி கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார். க-ரி

## இராணுவத்தினர் பின்வாங்கினர்

(லண்டன்)
அச்சுவேலிப் பகுதியில் நேற்று தாக்குதல் மேற்கொண்ட இராணுவத்தினர் நேற்று மாலையே பின்வாங்கி தமது நிலைகளுக்குச் சென்றுள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது.

அச்செய்தி மேலும் தெரிவிக்கையில், 'மின்னல் தாக்குதல்' என்ற பெயரில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் இப்பிராந்தியத்திலிருந்து பெருமளவு பொது மக்கள் வெளியேறிவிட்டதாக

(6-ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு'
வாரமலர்

நாளை 18.06-95
ஞாயிறு
வெளிவருகிறது

- சிரித்திரன் சுந்தர்
- சொககன
- கலாநிதி சுப்பிரமணியன்
- மு. திருநாவுக்கரசு
- ச. தியாகராசா
- மு. வே. யோ. வாஞ்சிநாதன்

ஆகியோரினதும்
பல படைப்பாளிகளினதும்
படைப்புக்கள்
இடம்பெறுகின்றன

12 பக்கங்கள்

விலை ரூபா
ஐந்து மட்டுமே

## வரி விளம்பரம்

[O. L] MATHS

G. C. E. (O. L)ல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரையும் சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினுல 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும் ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குழி. (சி-1517)


## உணவுஅட்டை மீள்பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேலணைப் பகுதியைச் சேர்ந்த 'உ' அடையாளமிட்ட உலர் உணவு அட்டைகள் மீழ் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக வேலணை பிரதேச செயலர் திரு. இளங்கோ தெரிவித்தார்.

இது பற்றி மேலும் அவர் தெரிவிக்கையில் 'உ' அடையாளம் கொண்ட உலர் உணவுப் பங்கீட்டு அட்டைகள் வைத்திருக்கும் 700 குடும்பங்களின் உலர் உணவு அட்டைகளே மீள் பரிசீலனை செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 162


01.07.1995ம் திகதி

அத்தியார் இந்துக் கல்லூரியில்

## "நாமிருக்கும் நாடு நமது"

— நாடகம் —

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால், இன்று நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடாத்தப்படவிருந்த "நாமிருக்கும் நாடு நமது" என்னும் நாடகம் தவிர்க்கமுடியாத காரணத்தினல்

02.07.1995ம் திகதி

ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்

அன்பளிப்பு:

100/-, 50/-, 20/- மாணவர்களுக்கு 10/-

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

(ஏ 5012)



# நல்லாசிரியர் விருது

தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அங்கமான ஆசிரிய வாண்மை விருத்திக்குழு "விளக்கு" சஞ்சிகையின் சார்பில் நல்லாசிரியர்களைத் தெரிவு செய்து விருது வழங்கிக் கெளரவிக்கத் தீர்மானித்திருக்கும் விடயம் யாவரும் அறிந்ததே.

யாழ். மாவட்டத்தில் மூவரையும், வட தமிழீழப் பெரு நிலப்பரப்பில் மூவரையும் சிறந்த ஆசிரியர்களாகத் தெரிவு செய்து அவர்களுக்கு "நல்லாசிரியர் விருது" வழங்கிக் கெளரவிப்பதோடு அவர்களுள் முதலிடம் பெறுவோருக்கு தங்கப்பதக்கமும் ரூபா ஐயாயிரமும், இரண்டாம் இடம் பெறுவோருக்கு வெள்ளிப்பதக்கமும், ரூபா மூவாயிரமும், மூன்றும் இடம் பெறுவோருக்கு வெண்கலப்பதக்கமும், ரூபா இரண்டாயிரமும் வழங்க "விளக்கு" சஞ்சிகை முன்வந்துள்ளது.

இவ்விருதைப் பெறுவதற்கு முற்றிலும் தகுதியுடையவர் எனத்தாம் கருதும் ஆசிரியர் சம்பந்தமான விபரங்களை தற்போது வெளிவந்துள்ள விளக்குச் சஞ்சிகையின் பங்குனி - சித்திரை இதழில் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற் தெளிவாகக் குறித்து தனித்தனியாக அனுப்பும்படி அதிபர்கள், ஆசிரியர்கள் போன்ருேரையும். ஆசிரியர் கழகம், மாணவர் மன்றம், பழைய மாணவர் மன்றம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், இலக்கிய மன்றம் போன்ற பொதுப்பணி அமைப்புக்களையும் "விளக்கு" வேண்டிக் கொள்கிறது,

விண்ணப்பங்களும் விதந்துரைகளும் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி 30-06-95 ஆகும் விண்ணப்பப்படிவம் இணைக்கப்பட்டுள்ளசஞ்சிகையைப் பாடசாலைகளிலும் புத்தகக்கடைகளிலும் தமிழீழக் கல்விக் கழகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த ஆண்டு பரீட்சார்த்தமாக நடைபெறவுள்ள இத்தெரிவு வெற்றிபெறும் பட்சத்தில் அடுத்து வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

ஆசிரியர் வாண்மை அபிவிருத்திக் குழு,
தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை,

(சி-5011)


## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

17-06-1995

சனி இரவு

08-02 புரட்சிக் குரல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08 20 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 மலேரியா நோய் பற்றி- கலந்துரையாடுவோம்

18-06-1995

ஞாயிறு காலை

07.02 மாவீரவணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07 30 செய்திகள்
07.35 பத்திரிகைச் செய்திகள்
07-45 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

17-06-1995

சனி மாலை

05 01 சிந்தனைச்சிதறல்
05 02 எழுச்சி கீதம்
05.10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் விஞடி விஞ
06 00 சிந்தனைக்கு சிலவிநாடிகள்
06-02 பாமாலை
06.15 என்தெரிவு
06-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## இன்று

(காழும்புத்துறை)

தொல்புரம் சர்வோதய நிலைய மண்டபத்தில் வட இலங்கை சர்வோதய அங்கத்துவ பிள்ளைகளின் ஆத்திசூடி கொன்றைவேந்தன், வாக்குண்டாம் மனன முற்ருேதல் நிகழ்வு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8. 30 மணிக்கு தொல்புரம் அமெரிக்கன் மிஷன் த. க. பாடசாலை அதிபர் திரு. வி. ந சிறீதரன் தலைமையில் நடைபெறும். -154

0 0 0

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரிவு சர்வோதய கிராமங்கள் இணைந்து நடத்தும் திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் வாக்குண்டாம் முற்ருேதல் நிகழ்ச்சி இன்று சனிக்கிழமையன்று சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. -72

0 0 0

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க புனரமைப்பு பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் வலி தென்மேற்கு பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி. நவமணி கந்தையா தலைமையில நடைபெறவுள்ளது. -72

0 0 0

(உடுவில்)

உடுவில் கல்விக் கோட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி இன்று 17 ஆம் திகதி காலை 8. 30 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

0 0 0

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபையில் அங்கத்துவம் வகிக்கும் சங்கங்களின் பிரதிநிதிகளின் கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபைத் தலைவர் தா. கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

170-சி

0 0 0

இசைத்துறையில் வெள்ளி விழாக்காணும் கலைஞன் திரு. மா. ஸ்ரீ ரங்கநாதனுக்கு பாராட்டு விழா இன்று திருநெல்வேலி இராமகிருஷ்ணலயத்தில் இன்று 17ம் திகதி சனிக்கிழமை பி. ப 4. 00 மணிக்கு நடைபெறும்.

# அனுமதியின்றி பனைதறிப்பு 6000 ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒரு ஆலய நிர்வாக சபையினர் கிராமிய உற்பத்திக் குழுவினரின் அனுமதியின்றி ஆறு பனைகளைத் தறித்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இதற்கான அபராதம ஆறுயிரம் ரூபாவைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருததிப் பகுதியினர் அற விட்டுள்ளனர்.

தமிழீழத்தில் கண்டபடி பனை தறித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதால் அனுமதியின்றிப் பனை தறிப்போர் மீது இவ்வித நவடிக்கை எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. -சி

# தொற்று நீக்கும் பிரிவு செயற்படத் தொடங்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம போதன வைத்தியசாலையின் தொற்று நீக்கும் பிரிவு நேற்று முன்தினம் முதல் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

வைத்தியசாலையில் பழுதடைந்த நிலையில் இருக்கும் இரண்டு தொற்று நீக்கி இயந்திரங்களில் ஒன்று திருகதப்பட்டு நேர்று முன்தினம் முதல்இயங்க ஆரம்பித்துள்ளது.

மற்றைய தொற்று நீக்கி இயந்திரம் திருத்தும் வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொற்று நீக்கி இயந்திரம் பழுதடைந்த சமயம் கடந்த திங்கட்கிழமை முதல் வைத்தியசாலையின் தொற்று நீக்கும் சேவை முழுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. 170-சி

# மொழி, கலைத்திறன் போட்டி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்டத்திலான தமிழ்மொழி கலைத்திறன் போட்டிகள் இன்று 17ம்திகதியும் 19ம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளது.

மொழித்திறன், இசைத்திறன், வாத்தியக் கருவிகள் இசைத்தல் போட்டிகள் சிறுவர் நாடகம் [பிரிவு 2] ஆகிய பேர்ட்டிகள் இன்று 17 ம்திகதி காலை 8. 30 மணி முதல் மருதனர்மடம் இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

நடனப்போட்டிகள் 19 ம் திகதி திருக்குடும்ப கன்னியர்மடம் வித்தியாலயம், கன்னியர் மடம் ம வி. ஆகியவற்றில் காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும். ஆக்கநடனம் குழு நிகழ்ச்சி பிற்பகல் ஒரு மணிக்கு கன்னியர்மடம் ம. வித்தியாலயத்தில் நடைபெறும்

இதே தினம் சிறுவர்நாடகம் [பிரிவு -1] யாழ் இந்துமகளிர் கல்லூரியிலும், சமூகநாடகம் [பிரிவு -3] வேம்படி மகளிர் கல்லூரியிலும், வரலாற்று நாடகம் [பிரிவு -3, 4] யாழ் மத்திய கல்லூரியிலும் காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும் நடனநாடகம் யாழ் கன்னியர் மடம் ம. வி. லும் நாட்டுக் கூத்து சென். மேரிஸ் வித்தியாலயத்திலும், இசைநாடகம் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் பி. ப 12. 30 மணிக்கு ஆரம்பமாகும். சி- சி

## தோட்டங்களை

# குத்தகைக்கு விடுவதற்கு தொழிலாளர் எதிர்ப்பு

(கண்டி)

பெருந்தோட்டங்களை தனியார் துறையினரிடம் நீண்ட கால குத்தகைக்கு விடுவதற்கு எடுக்கப்பட்ட முடிவை தோட்டத் தொழிலாளர்கள் எதிர்த்துள்ளனர்

இது குறித்து தமது ஆட்சேபனையை அரசுக்கு தெரிவிப்பதற்காக ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தோட்டத்தொழிலாளர் கூட்டுக்கமிட்டி தீர்மானித்திருக்கின்றது.

பெருந்தோட்டங்களை 50 வருட காலகுத்தகையில் தனியாரிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளமையால் தமது உரிமைகளுக்கும் வருவாய்க்கும் இதனல் பெரும் பாதிப்பு ஏற்படுமென தோட்டத் தொழிலாளர்கள் அஞ்சுகின்ருர்கள். இ


## தொழிநுட்பக் கல்லூரி

# இறுதிப் பரீட்சைகள்- 1994

கீழ்க்காணும் பயிற்சிநெறிகளுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 1995-06-19ம் திகதி ஆரம்பமாகும். பரீட்சைக்கான அனுமதி அட்டை, நேரசூசி என்பவற்றை பகுதித் தலைவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாமென்பதையும் அறியத்தருகிறேன்.

### பயிற்சி நெறிகள்

1. தொழிற் கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திரம் - (N.C.B.S.)
2. பொறிவலர் தொழில் பயிற்சி தேசிய தராதரப்பத்திரம் (N. C. E. C. P.)
3. கணக்கியலிலான உயர் தேசிய டிப்ளோமா - 3ம் வருடம் (புதியபாடத் திட்டம்) (H.N D.A - III)
4. கணக்கியலிலான உயர் தேசிய டிப்ளோமா 4ம் வருடம் (H. N. D. A. IV)

க. ஜெயரெட்ணம்
அதிபர்.

தொழிநுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்,
1995-06-16,

[ஏ 5015]

நல்லூர் பிரதேச நூலகம்

### மணிவாக்கு

ஆண்டவனுக்காக ஒரு கோயில் அமைத்தவுடன், சைத்தானும் அருகிலே ஒரு மடத்தைக் கட்டுகிருன்.

— இங்கிலாந்து.

## நமது நோக்கு

### தீர்வுத் திட்டம்

அரசாங்கம் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு-கிழக்கில் பாரிய தாக்குதலுக்கு தயாராகி வருகிறது என்றும் ஜுலை நடுப்பகுதியில் அல்லது ஆகஸ்ட் முற்பகுதியில் இத் தாக்குதல்கள் ஆரம்பமாகும் என்றும் சந்திரிகா அம்மையார் வலியுறுத்தியுள்ளார். தமிழன் என்று கூறப்படும் லக்ஷ்மன் கதிர்காமர் திருப்பவும் ஐரோப்பா சென்றுள்ளார். லக்சம்பேர்க்கில் நடைபெறும் ஐரோப்பிய மன்ற மகாநாட்டில் விடுதலைப் புலிகள் பிரான்சிடமிருந்து வாங்கிய ஆறு இலகுரக விமானங்களைத் தற்கொலைத் தாக்குதலுக்கு பாவித்து பெரும் சேதத்தை சிறிலங்காவுக்கு ஏற்படுத்தப் போகிருர்கள் என்றும் விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வருவதற்கு அவர்களுக்கு தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு இழப்பை ஒற்படுத்தப்போவதாகவும் கூறியுள்ளார் கூடாத பிள்ளைகளை அடித்துத் திருத்துவது போல் கதிர்காமர் பேசியுள்ளார். அவரின் இக் கூற்றும் அரசு பாரிய தாக்குதலை செய்வதை கோடி காட்டுவதாக அமைகிறது. கதிர்காமரின் பிரச்சார நடவடிக்கை வேகமடைந்து வருவதும் தெரிய வருகிறது.

இதற்கிடையில் கொழும்பில் இருந்துகொண்டு தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதாக கூறும் ஈ பி டி. பி. புளொட் உதிரிக் குழுக்களும் தம் பங்கிற்கு வடக்கு - கிழக்கில் டாரிய தாக்குதல் நடத்துமுன் இனப்பிரச்னை தொடர்பான அரசின் தீர்வுத் திட்டத்தை வெளியிடவேண்டுமென்று சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அரசு வடக்கு-கிழக்கை கைப்பற்றி ஆட்சியை தங்கள் கைகளில் தருவார்கள் என்ற நப்பாசையில் இவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள் முன்னர் போல் மக்களை அடக்கி ஒடுக்கி அவர்கள் மீது சவாரிவிடலாம் என்று கனவு காண்கின்றனர்.

அரசாங்கத்திடம் எவ்வித இனப் பிரச்னைக்கான தீர்வுத் திட்டத்தின் ஒரு வரியாவது இல்லை. அது சிங்கள மக்களையும் ஐ. தே கட்சியினரையும் தீர்வுத் திட்டம் அது இது என்று ஏமாற்றுவது போல் தமிழர்களையும் ஏமாற்றப் பார்க்கிறது. உதிரித் தமிழ் குழுக்கள் கனவுலகில் வாழ்வதால் ஏமாற்றம் அடைவது திண்ணம். ஆனல் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்கள் சூடுகண்ட பூனைகள். அதுவுமல்லாமல் அரசாங்கம் தமிழர்களுக்கு என்ன தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப்போகிறது? ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கலைவிட வேறு எதை முன்வைக்க முடியும். அதற்கு மிஞ்சிப் போக பௌத்த சிங்கள பேரினவாதம் இடம் கொடுக்குமா? இது இங்கிருந்து கொழும்பு சென்று ஐக்கிய இலங்கையை உருவாக்க முன்னிற்போம் என்று முழங்கிய சில புத்திஜீவிகள் என்று தம்மைக் கூறிக்கொள்வோரைத்தான் திருப்திசெய்ய முடியும்.

# பேருவளையில் விஷவாயுத் தாக்குதல் ஆறு மாணவிகள் மயங்கி விழ்ந்தனர்!

## பாடசாலை இழுத்து மூடப்பட்டது

[கொழும்பு]

பேருவளைப் பகுதியில் பாடசாலை சென்ற மாணவிகள்மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருஇளைஞர்கள் விஷவாயுவை விசிறியதில அவர்கள் மயங்கி வீழ்ந்துள்ளனர் இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; நேற்று முன்தினம் காலை 7-30 மணியளவில் பேருவளைப் பகுதியில் பாடசாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மாணவிகளைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருஇளைஞர்கள் கையில் வைத்திருந்த சிறிய 'பம்' ஒன்றின் மூலம் அவர்களை நோக்கி விசிறியுள்ளனர்.

இது கேலிக்காகச் செய்யும் விடயமெனக் கருதி இந்த மாணவிகள் பாடசாலை சென்றுள்ளனர் அங்கு இவர்களின் முகத்திலும் உடலிலும் பயங்கர எரிவு ஏற்பட்டதுடன் இவர்கள் மயங்கி வீழ்ந்துள்ளனர். உடனடியாக இவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள்மீதுவிசிறப்பட்டது விஷவாயுவாகஇருக்கலாமென செய்தி பரவியதையடுத்து பாடசாலை இழுத்துமூடப்பட்டது. இதனல் பேருவளையே பெரும் பரபரப்படைந்ததுடன் மக்கள் பெரும் அச்சமடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது

மீண்டும் இவ்வாறான விஷவாயுத் தாக்குதல் நடப்பதை தடுப்பதற்காக இங்கு பொலிஸார் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். எனினும் இந்த விஷவாயு என்ன என்றும் இதனை வீசியவர்கள் யார் என்றும் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. -சி

# திம்புலாகலவை பாதுகாக்க பாரிய அளவிலான மண் அணை

(கொழும்பு)

திம்புலாகலயில் குடியேற்றப்பட்டுள்ள சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு கிராமத்தின் எல்லைப்புறமாக மண்ணுலான பெரும் அணையொன்று அமைக்கப்பட்டுவருகின்றது.

கனரக இயந்திரங்களின் உதவியுடன் இந்த மண் அணை அமைக்கப்படுகின்றது.

இதேவேளை திம்புலாகல பகுதியைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களுக்கு பொலிஸாரால் ஆயுதப்பயிற்சி வழங்கப்பட்டு ஊர்காவல்படை அணியில் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

திம்புலாகல குடியேற்றத்திலிருந்து பெருமளவில் வெளியேறிக் கொண்டிருக்கும் சிங்கள குடியேற்ற வாசிகளை தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே அரசு இந்த ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கிடையில் வடக்கு-கிழக்கு எல்லைப்புற கிராமங்களிலிருந்து வெளியேறும் சிங்கள குடியேற்ற வாசிகளைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் அரசு பல திட்டங்களை அவசர அவசரமாக அறிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. கி-சி

# எல்லாளன் படையின் எச்சரிக்கை பாரதூரமான தொன்றல்ல!

(கொழும்பு)

எல்லாளன் படை அரசுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை பாரதூரமானதொரு விடயமல்ல என அரசு தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையம் உட்பட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை குண்டு வைத்து தகர்க்கப் போவதாக 'எல்லாளன் படை' கடந்த சில நாட்களாக அரசை எச்சரித்து வருகிறது.

இலங்கைக்கு உல்லாசப் பயணிகளை வரவேண்டாம் எனவும் இந்த எச்சரிக்கையை மீறி வருவோரின் உயிருக்கு ஆபத்து கூட ஏற்படலாமெனவும் எல்லாளன் படை எச்சரிக்கை விடுத்திருந்தது. இதையடுத்து பிரிட்டன் தனது நாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு செல்வதை தடை செய்துள்ளது பிரிட்டனை போன்று வேறு நாடுகளும் தமது பயணிகள் இலங்கைக்கு செல்வதை தடை செய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் எல்லாளன்படை என்பது புலிகளின் படையே என்றும் புலிகள் கொழும்பில் தாக்குதல்களை நடாத்தவே 'எல்லாளன் படை' என்ற பெயரில் இயங்குவதாகவும் இதனை ஒரு பாரதூரமான விடயமாக கருதத் தேவையில்லை எனவும் அரசு தெரிவித்துள்ளது. - சி

# கடமை நேரத்தில் புகைப்பிடிக்க சுகாதார ஊழியர்க்கு தடை

(கொழும்பு)

''சுகாதார ஊழியர்கள், கடமை நேரத்தில் புகை பிடிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை மீறும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' இவ்வாறு சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி அறிவித்துள்ளார்.

பலுப்பிட்டியாவில் புதிதாக அமைக்கப்பட்ட வைத்திய சாலையை அமைச்சர் பௌஸி திறந்து வைத்து மேலும் உரையாற்றுகையில்:

சுகாதார ஊழியர்கள் கடமை நேரத்தில் புகைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இதுபற்றிய சுற்றறிக்கை ஒன்று அனைத்து வைத்தியசாலைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் தற்போது இயங்கிவரும் சிற்றுண்டிச்சாலைகளிலும் சிகரெட் விற்பனை செய்வதும் தடை செய்யப்படும் என்றும் கூறினர். வி-சி

### கப்பல் விவகாரம்

## புலிகளின் கோரிக்கை அரசு நிராகரிப்பாம்

(கொழும்பு)

வடபகுதிக்குச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மேற்பார்வையில் வரும் கப்பல்கள் காங்கேசன் துறைமுக வழியாகப் பரிசோதிக்கப்பட்டு அனுப்பப்படுவதை இலங்கை அரசு தவிர்க்கவேண்டும் என்ற புலிகளின் கோரிக்கையை அரசு நிராகரித்துள்ளதாக ஏ. எவ். பி. செய்தி தெரிவித்துள்ளது.

ஐ. சி ஆர். சி. கப்பல்கள் காங்கேசன்துறை வழியாகப் பயணித்து, நோயாளர்களைக் கொண்டு செல்வதாளல் கப்பலின் பாதுகாப்பிற்குத் தாங்கள் உத்தரவாதம் தர இயலாது என்று புலிகள் கருத்து வெளியிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 4ம திகதி ஐ. சி. ஆர். சி. கப்பல் ஒன்று காங்கேசன் துறைமுகத்தினுள் நுழையும் சமயத்தில், வெடிகுண்டுக்கு இலக்காகிச் சேதமடைந்ததை அடுத்து இப் புதிய பிரச்னை எழுந்துள்ளதாகத் தெரியவருகின்றது. கே சி

## தகவல் செயலாளர்

(கொழும்பு)

ஜனதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் தகவல் செயலாளராக விக்டர் பெரேரண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்

இவர் கடந்த டிசம்பர் மாதம் முதல் ஜனதிபதியின் தொடர்புச் செயலாளராக பணிபுரிந்து வந்தார். கி

## 80 தொழிலாளர் உயிரிழப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் ஹைதராபாத்தில் உள்ள தொழிற்சாலை ஒன்றில், மின்சாரக் கோளாறு காரணமாக எழுந்த தீயில் தொழிற்சாலை முற்றிலும் சேதமாகியதுடன், தொழிலாளர் 80 பேர் பலியாகியுமுள்ளனர். கே சி

## அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பிராந்திய தொலைக்கல்விப் பொதுப் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் அனைத்து ஆசிரிய மாணவர்களும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 00 மணி முதல் 12- மணி வரையில் நிலையத்தில் அனுமதி அட்டைகளை பெற்றுச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்- சி

## ஆசிரியர்களுக்கு புதிய சம்பளம்

(வட்டுக்கோட்டை)

சங்கானை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல பாடசாலை ஆசிரியர்களுக்கும் இம்மாதம் புதிய சம்பளம் வழங்கப்படுமென கல்விப்பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தைமாத சம்பளத்திற்கான நிலுவையும் இம்மாதச் சம்பளத்துடன் வழங்கப்படுமெனவும் பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மே மாதங்களுக்கான நிலுவைப்பணம் பின்னர் படிப்படியாக வழங்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். 139. சி

## பலதும் பத்தும்

### இடமறிந்து பேசினூர்!

இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு சென்னையில் வெகு கோலாகலமாக நடந்ததல்லவா? இறுதிநாள் கருத்தரங்கில் கட்டுரைகள் வாசிக்கப்பட்டு, அவை பற்றிய விவாதங்கள் முடியும் தறுவாயில்... அப்போது முதலமைச்சராக இருந்த அண்ணுதுரை மண்டபத்தற்கு வந்தார்.

கூடியிருந்த மக்கள் அவரின் இனிய தமிழைக் கேட்கச் சற்று நிமிர்ந்து இருந்தார்கள்; ஆனல் ஏமாந்து விட்டார்கள்!

அவர் பேசினூர்... ஆனல் ஆங்கிலத்தில். ஏன் தெரியுமோ? உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் வந்த அறிஞர்களை மனநிறைவோடு வாழ்த்தி அனுப்பும் உரையாக அமையவேண்டும் என்பதற்காக அவர்கள் எல்லோருக்கும் புரியும்படியான ஆங்கிலத்திலே பேசினூர்,

''எங்கள் நாடு வறுமை நாடுதான்! ஆனல்... எங்கள் மக்கள்மனத்தால் செல்வந்தர்கள் என்று கூறித் தமிழ்ப் பண்பாட்டையே நினைவுபடுத்தினூராம். இடமறிந்து பேசுவதில் வல்லவர் அண்ணு!

— மயூரன்

# அப்பாவித் தமிழரை கைதுசெய்வதை படையினர் தவிர்க்கவேண்டும்

## சந்திரிகா உத்தரவு

(கொழும்பு)
அப்பாவி பொதுமக்களை தேவையற்ற முறையில் கைது செய்து துன்புறுத்துவதை தவிர்க்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

இராணுவமும் பொலிஸாரும் மனித உரிமைகளை மதித்து செயல்பட வேண்டுமென்றும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யும் அப்பாவித் தமிழ் மக்கள் அவர்களது தாய்மொழியில் மனுவை சமர்ப்பிக்க உரிமை வழங்க வேண்டும் என்றும் கைது செய்யப்படுவோர் தங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுடன் தொடர்பு கொள்ளவும் வாய்ப்பு தரவேண்டுமென்றும் ஜனாதிபதி சந்திரிகா பொலிசாரையும் இராணுவத்தினரையும் கேட்டுள்ளார்.

அப்பாவி தமிழ் மக்கள் விசாரணை என்ற போர்வையில் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்படுவதும், அவர்களுக்கு இன்னோரன்ன தொல்லைகள் கொடுப்பது குறித்தும் உள்ளூரில் எழுந்துள்ள புகார்களை அடுத்தும் மேற்கத்திய நாடுகள் இலங்கையில் மீண்டும் மனித உரிமை மீறல்கள் ஆரம்பித்துள்ளதாக எழுப்பிய புகார்களை அடுத்தும் ஜனாதிபதி சந்திரிகா இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. கே-சி

# அடுத்த வருடம் ஒன்றரை லட்சம் மாணவர் ஆண்டு 1ல் சேர்க்கப்படுவர்

(கொழும்பு)
அடுத்த வருடம் ஆண்டு ஒன்றுக்கான வகுப்புக்களில் 1 லட்சத்து 50 ஆயிரத்துக்கு அதிகமான மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

ஆண்டு ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப் படுகின்றன என கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் 30-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கே-சி

# வன்முறைச் சம்பவங்களில் படையினர் ஈடுபாடு

(மட்டக்களப்பு)
மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கைவிடப்பட்டதையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் 29 க்கும் அதிகமான வன்முறைச்சம்பவங்களில் படையினர் ஈடுபட்டிருப்பதாக மனித உரிமை அமைப்புக்கள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவங்களில் பல தமிழ் மக்கள் சுட்டுக் கொலலப்பட்டும், கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

இதே வேளை மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கைவிடப்பட்டதையடுத்து மட்டக்களப்பில் கைது செய்யப்பட்ட ஒன்பது தமிழர்களின் நிலை குறித்து இதுவரை தகவலேதும் கிடைக்கவில்லை. இவர்களை தாம் விடுதலை செய்துவிட்டதாக படையினர் தெரிவித்திருக்கின்றனர். கி-சி

# கட்டுநாயக்காவில் வெடித்த குண்டு இலங்கைக்கு புதியதாம்

(கொழும்பு)
கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடந்த 5ம் திகதி வெடிக்க வைக்கப்பட்ட குண்டு. இலங்கைக்கு புதியது என தெரிவிக்கப் பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் பிரபல்யமான கெரில்லாக்களிடம் இவ்வெடி பொருட்கள் இருந்த போதும் அது இலங்கையில் இலகுவில் கிடைப்பதில்லையென்று அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த குண்டு 50 கிலோ கிறாம் நிறையுடையது என்றும் அது முழுமையாக வெடித்திருந்தால் பேரழிவு ஏற்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு முக்கிய சந்தேக நபர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த நால்வர் பற்றிய முக்கிய தடயங்களை குற்றப் புலனாய்வு திணைக்கள விசேட குழுவினர் கண்டுபிடித்துள்ளனராம்.

இந்த நான்கு நபர்களும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் இவர்கள் அடுத்த சில தினங்களில் கைது செய்யப்படுவர் எனவும் குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது. கே-சி

# புலிகள் தலைவர் பிரபாகரனை கைது செய்யத் தேவையில்லை

[சென்னை]
ராஜீவ் கொலை வழக்கு முடியாத நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை குற்றவாளியாகக் கருத முடியாது. எனவே அவரைக் கைது செய்யத் தேவையில்லை என திமுக தலைவர் திரு.மு. கருணாநிதி கூறியுள்ளார்.

ராஜீவ் கொலை தொடர்பாக திரு.பிரபாகரனை கைதுசெய்து நாடு கடத்த வேண்டுமெனக் கூறப்படுவது அரசியல் ஆதாயத்திற்காக சிலர் மேற்கொள்ளும் நடவடிக்கையாகும் குற்றவாளியாக நிருபிக்கப்படாத ஒருவரைக் கைதுசெய்யவேண்டியதில்லை எனவும் திரு, கருணாநிதி கூறியுள்ளார்.

திரு: பிரபாகரனைக் கைது செய்து நாடுகடத்துமாறு இந்திய அரசு இலங்கையிடம் கோரியிருப்பது, தமிழகத்தில் கட்சிகளிடையே சர்ச்சையை எழுப்பியுள்ளதாகவும் பல தலைவர்கள் இந்திய அரசின் இந்தக் கோரிக்கையை கடுமையாக விமர்சித்ததுடன் இலங்கை இனப்பிரச்னையில் இந்தியா மீண்டும் தலையிடுவதற்காகவே இவ்வாறான செயற்பாடுகளில ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதேவேளை திரு. பிரபாகரனை கைதுசெய்ய பிரதமர் நரசிம்மராவ் தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டுமென நூறு நாடாளுமன்ற எம்.பி.க்கள் பிரதமர் ராவை வலியுறுத்தியுமுள்ளனர். -சி

# ★பாகிஸ்தானில் இருமுறை மணம் செய்த பெண்ணுக்கு 30 கசையடி

(இஸ்லாமாபாத்)
பாகிஸ்தானின வட-மேற்கு எல்லை மாகாணத்தில், ஒரு பெண் இரு முறை மணம் செய்துகொண்டதற்காகப் பொதுமக்கள் முன்னிலையில் 30 கசையடிகள் வழங்கப்பட வேண்டும் என்றும், 5 ஆண்டு கடும் காவல் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டுள்ளது.

இதே வழக்கில் அதே கிராமத்தைச் சேர்ந்த தம்பதியர்க்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பெண்ணை ஆசை காட்டி அழைத்து வந்து, ஒரு நபரிடம் 20 ஆயிரம் ரூபாவுக்கு விற்றுவிட்டதாக அந்தத் தம்பதியர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. கே-சி

# அரச துறையில் ஒழுங்கீனம்; விசாரணைகள் விரைவில் பூர்த்தி

(கொழும்பு)
அரசாங்க துறையில் இடம்பெற்ற ஒழுங்கீனங்கள் ஊழல்கள் ஆகியவை பற்றி விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விரைவில் அதன் கடமைகளை பூர்த்திசெய்யவுள்ளது.

பல முக்கியமான புகார்கள் மீது இந்த விசாரணைக்குழு ஏற்கனவே விசாரணைகளை பூர்த்தி செய்துள்ளது என்று ஆணைக்குழுவின் தலைவர் நீதியரசர் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

பஸ் கொள்வனவு விவகாரம் ஹில்டன்ஹோட்டல் நிர்மாணம் நைலோன் மீன்பிடி வலைத் திட்டம் ஆகியன இவற்றுள் அடங்கும்,

இந்த விசாரணைகள் மூலம் பல ஊழல்கள் அம்பலத்திற்கு வருமெனவும் பலர் இதில் சிக்குவர் எனவும் கூறப்படுகிறது. -கே.சி

# கொக்கட்டிச்சோலையில் சிப்பாய் உயிரிழப்பு

(கொழும்பு)
அம்பாறை சொக்கட்டிச் சோலையில் விடுதலைப் புலிகளுக்கும் விசேட பொலிஸ் அதிரடிப் படையினருக்கும் இடையில் நேற்று முன் தினம் நண்பகல் ஏற்பட்ட மோதலில் அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார் மற்றொருவர் காயமடைந்தார்.

சித்தாண்டி, கறுவாஞ்சிக்குடி போன்ற பகுதிகளிலும் விடுதலைப புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

முல்லைத் தீவு கடற்பிராந்தியத்தில் படகொன்று கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் தெரிவித்தார். க-சி

# இராசி பலன்

17-06-1995
சனிக்கிழமை
[தமிழுக்கு ஆனி-03]

பஞ்சமி முன்னிரவு 11-35 வரை திருவோணம் முற்பகல் 8-10 வரை, சித்தயோகம், இராகுகாலம், காலை 8-53 முதல் 10-23 வரை, சுபவேளை மாலை 2-53 முதல் 4-23 வரை.

மேடம்; குடும்பத்தில் செல்வாக்கு, எதிர்பாராத உதவி, பயணம்.

இடபம்: கருத்து வேறுபாடு புதிய கடன்கள். அலைச்சல்.

மிதுனம்: குடும்ப மனஸ்தாபம், அமைதியின்மை, தாயார் கோபம்.

கடகம்; உறவினர் ஆதரவு. தொழில்லாபம், காரிய சித்தி.

சிங்கம்; குடும்ப மகிழ்ச்சி, சுபகாரியம், முதியவர் ஆசி.

கன்னி: தொழில் சங்கடம், வீண்பழி, மனம் நோதல்.

துலாம்: ஆரோக்கியக் குறைவு, கண்டனம், விரோதிகள் துன்பம்.

விருச்சிகம்: புதிய முயற்சி, பணியாள் உதவி, தொழில் சிறப்பு.

தனுசு; எதிரியின் வலிமை. குடும்பச்சங்கடம், வெறுப்பு.

மகரம்: புத்திரர் சிறப்பு, சாதகமானசெயல், பணவரவு.

கும்பம்; வருவாய் பாதிப்பு முயற்சித் தடை, மனச் சஞ்சலம்

மீனம்: தொழில் உறவு, நண்பர் சகவாசம், மன அமைதி.

— ஜோஸ்யர்

# புலிகளால் பெண்டுகள் சேனையில் பெருமளவு ஆயுதம் மீட்பு

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு பெண்டுகள் சேனையில் முகாமமைக்க முற்பட்ட இராணுவ அணியொன்றின் மீது கடந்த திங்கட்கிழமை புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்ட மேலும் மூன்று இராணுவத்தினரின் சடலங்களும், மேலும் ஒரு தொகுதி ஆயுதங்களும் விடுதலைப்புலிகளினால் தற்பொழுது மீட்கப் பட்டுள்ளன.

★ ரி 56 - ரக துப்பாக்கி ஒன்று
★ ரி 56 - 1 ரக துப்பாக்கி ஒன்று
★ ரி 56 பட்மொடல் துப்பாக்கி - ஒன்று
★ ரி 81 ரக துப்பாக்கி ஒன்று
★ ரி 56 துப்பாக்கி ரவைக் கூடுகள் - ஐந்து
★ ரி 81 துப்பாக்கிரவைக் கூடுகள் ஐந்து
★ ஏ. கே. ரவைக்கூடு தாங்கியணி ஒன்று
★ நடுத்தர ரவைகள் எண்ணூறு
★ தடைக்கம்பி ஒருலோட்
★ முள்ளுக்கம்பி மூன்று அந்தர்
★ சாக்கு மூன்று பண்டல் ஆகிய இராணுவப் பொருட்களே தற்பொழுது மீட்கப் பட்டிருக்கின்றன.

இத்தாக்குதலில் 20 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதோடு பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருந்தமையும் தெரிந்ததே. கி-சி

# சங்கிலி அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)
பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் வயோதிபமாது ஒருவரின் தங்கசங்கிலி அபகரிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில்நடைபெற்றதேர் பவனியின் போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

ஈச்சமோட்டை விதானையார் வீதியை சேர்ந்த சிவகுரு இராசம்மா(வயது-75) என்பவரின் தங்கசங்கிலியே அபகரிக்கப்பட்டது. 170

# கல்முனைக்கடலில் காணாமல் போனவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
கல்முனை மண்டைதீவுக் கடற்பிராந்தியத்தில் கடந்த புதன்கிழமை காலை மீனவர்கள் மீது கடற்படையினர் நடாத்திய வெறியாட்ட தாக்குதலின் போது காணாமற் போனவர்களில் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

காணாமற் போனவர்களை கண்டுபிடிக்கும் நோக்குடன் கடந்த மூன்று நாட்களாக கல்முனை கடற் பிராந்தியத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மீனவர்களே கல்முனைக் கடலில் இச் சடலம் மிதந்து ஒதுங்கியதைக் கண்டுமீட்டு வந்தனர்.

குருநகர் ஓடக்கரை வீதியைச் சேர்ந்த லோறன்ஸ் கனகு]43 வயது] என்பவரது சடலமே மீட்கப்பட்டது.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப்படும் இவரது சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. 90 170-சி

பொது சன நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர் இளைநூலகம்

இராணுவ தாக்குதலால்

# செல்வச்சந்நிதி கோவிலுக்கு பத்து லட்சம் ரூபா நஷ்டம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் மீது அண்மையில் இராணுவம் மேற்கொண்ட ஷெல மற்றும் விமானத் தாக்குதலால், கோயிலுக்குப் பத்து லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஆலயத்தின் முன்மண்டபம், பூங்காவன மண்டபம், களஞ்சிய அறை, மடைப்பள்ளி, வாகனசாலை, மணிக்கூட்டுக் கோபுரம், வாகனங்கள் மற்றும் உடைமைகள் என்பன இராணுவத்தினரின் தாக்குதலகளுக்கு இலக்காகிப் பலத்த சேதம் அடைந்துள்ளன.

1986ம் ஆண்டு வன்செயல்களுக்குப் பின்னர், இவ்வாலயம புனரமைக்கப்பட்ட பின்னர் கடந்த, மே மாதம் 17ந் திகதி இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல்களினுல் ஆலயம் பலத்த சேதமடைந்துள்ளது. இதை மீளவும் புனரமைப்பதற்குக் குறைந்தது பத்து லட்சம் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மதிப்பீடு அடங்கிய மகஜர் ஒன்றைப் பருத்தித்துறைப் பிரதேச செயலருக்கும், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபருக்கும் மேற்படி ஆலய நிர்வாக சபை சமர்ப்பித்துள்ளது. 170 சி

## பத்திரிகையாளர்களுக்கு ஒய்வூதியத் திட்டம்!

(கொழும்பு)

பத்திரிகையாளர் ஒருவர் ஆகக்குறைந்த பட்சம் மாதாந்தம் 1500 ரூபா பெறும் வகையில் ஒய்வூதியத் திட்டம் வகுக்கப்படுமெனதொழில் தொழிற் பயிற்சி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்

அண்மையில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன கேட்போர் கூட்டத்தில் நடைபெற்ற செய்தியாளர் மகா நாட்டிலேயே அமைச்சர் மேற்படி தகவலைத்தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ஊழியர் நம்பிக்கை நிதியம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுடன் இணைந்து இத்திட்டத்தை செயற்படுத்தும், எனவும் இத்திட்டத்தினுல் எதிர்காலத்தில் பல பத்திரிகையாளர்கள் நன்மை அடைவர் எனவும் கூறினுர், ர-ரி

யாழ். வைத்தியசாலையில்

## அரச செலவில்' இரு சடலங்கள் அடக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்தியசாலை பிரேத அறையில் இருந்த இரண்டு சடலங்களை யாழ் ஆஸ்பத்திரி நிர்வாகம் அரசாங்க செலவில் அடக்கம் செய்துள்ளது.

இந்த சடலங்கள் இரண்டும் கடந்த நான்கு நாட்களாக பிரேத அறையில் இருந்ததால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசியதை தொடர்ந்து உறவினர்கள் சடலங்களை பொறுப்பேற்காததை யடுத்து நிர்வாகம் அரசாங்க செலவில் இவற்றை அடக்கம் செய்தது,

சடலங்கள் அடக்கம் செய்யப்பட்ட பின்னர் ஒரு சடலத்தின் உறவினர்கள் அதனை தருமாறு ஆஸ்பத்திரி நிர்வாகத்தை கேட்டுக்கொண்டனர். இதையடுத்து அடக்கம் செய்யப்பட்ட அச்சடலத்தை மீண்டும்தோண்டி எடுத்துகொடுக்குமாறுநிர்வாகம்சம்பந்தப்பட்ட சிற்றாழியர்களை பணித்தது. 170-சி

# குடும்பத் தகராறு பெண்ணுக்கு உலக்கையடி

(யாழ்ப்பாணம்)

குடும்பங்களுக்கிடையில் இடம் பெற்று வந்த பிணக்குகளால் ஏற்பட்டசச்சரவில் ஒரு பெண் உலக்கையடி, வாள் வெட்டுக்கிலக்கானுர்.

கடந்த சில நாட்களாக இடம்பெற்று வந்த தகராறினை தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு, உலக்கை. வாள், கொட்டன்கள் சகிதம் வீடு தேடி வந்த கோஷ்டி வளவினுள் நுழைந்து பெண்ணை அடித்துத்தாக்கி விட்டு தலைமறைவாகியது.

கொடிகாமம் வெள்ளம் போக்கட்டி என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிவலிங்கம் மகேஸ்வரி (49 வயது) என்ற குடும்பப் பெண்ணே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 90 - சி

2 ம் ஈழப்போரின்பின்

# 7000 குடும்பங்கள் வேலணையிலிருந்து இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது ஈழப் போரைத் தொடர்ந்து வேலணைப் பிரதேசச் செயலர் பிரிவிலுள்ள 7,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்து, குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருவதாக வேலணைப் பிரதேசச் செயலர் பணிமனை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; இரண்டாவது ஈழப் போரைத் தொடர்ந்து வேலணைப் பகுதியிலிருந்து 7,000 குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் 745 குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள், குடாநாட்டிலுள்ள 7 அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர். மற்றையோர் உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

அகதி முகாம்களில் வசித்து வரும் குடும்பங்களின் ஓலைக் குடிசைகள் பழுதடைந்த நிலையில் உள்ளன இக்குடிசைகளைத் திருத்தி அமைக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முகாம்களில் போதிய சுகாதார வசதிகள், மல சலகூட வசதிகள் இல்லையென்றும், மருத்துவ வசதிகளும் இந்த மக்களுக்குச் சரிவரக் கிடைப்பதில்லை என்றும் அவர் கூறினுர். 162 சி

## இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார்சைக்கிள் எரிபொருள் தாங்கியில், எரிபொருள்இருக்கிறதாவென தீக்குச்சியைத் தட்டிப் பார்த்தவேளை - திடீரென தீப்பற்றியதில் இளைஞர் ஒருவர் தீப்பற்றிப் படுகாய மடைந்தார்.

நீர்வேலியில் நேற்றுமுன்தினம் இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் நீர்வேலியைச் சேர்ந்த விநாசித்தம்பிகுகசீலன் (18வயது) என்பவரே காய மடைந்தவராவார். காய மடைந்தவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 90-சி

## ஏற்பு தடுப்பூசி மருந்து தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் ஏற்பு ஊசி மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

வட்டுக்கோட்டை கிராமிய வைத்திய சாலையிலும் இந்த ஏற்பு தடுப்பு ஊசி மருந்து கையிருப்பில் இல்லாத காரணத்தால் நோயாளர்கள் குறிப்பாக நாய் கடிக்கு ஆளானவர்கள் இந்த தடுப்புஊசி மருந்து போடமுடியாது மிகவும் சிரம மடைகின்றனர். 72

## சோதிட பயிலரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் பயிலரங்கும், ஆய்வரங்கும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர் சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள், திருக்கணித பஞ்சாங்கம்' எனும் விடயம் பற்றி உரை நிகழ்த்துவார். ஒன்றியத்தின் தலைவர் ஐ. வைத்தியநாதர் 'நீச பங்க இராச யோகமும், பண்டைய சோதிட நூல்களும்' என்னும் விடயம் பற்றி ஆய்வுரை நிகழ்த்துவார். சி

## குரக்கன் செய்கை

(அரியாலை)

யாழ். மாவட்டத்திலுள்ள கிராமப்பகுதிகளில் கோப்பாய், அச்சுவேலி, நீர்வேலி ஆகிய இடங்களில் வைகாசி மாதத்தில் ஆரம்பிக்கப்பட உள்ள குரக்கன் செய்கை தற்பொழுது தரிசு நிலங்களிலும் செய்கை நிலங்களிலும் விதைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 59

# 4000 அடையாள அட்டை செயலகம் வந்தது

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களின் 4000 அடையாள அட்டைகள் யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கும் பணியில் யாழ். ஆட்பதிவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை 1-8-54ம் ஆண்டிறகுப் பின்னர் பிறந்தவர்களுடைய பிறப்பு சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் யாழ். பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் ஏற்றுக் கொள்வது கடந்த 14ம் திகதி முதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக யாழ் மேலதிகமாவட்டப் பதிவாளர் பொன்னம்பலம் அறிவித்துள்ளார், 71-சி

# பாம்புக் கடிக்கு புதிய மருந்து அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள வைத்திய சாலைகளில் பாம்புக்கடிக்கு தற்பொழுது பயன்படுத்தப்படும் விஷமுறிவு மருந்துக்குப் பதிலாக செயல்திறன் கூடிய புதிய மருந்து ஒன்று பயன்படுத்தப்படவுள்ளது.

இப்புதிய மருந்து தற்பொழுது அனுரதாபுரத்தில் பரீட்சிக்கப் பட்டுவருகின்றது.

தற்போது பயன் படுத்தப்படும் விஷமுறிவு மருந்து இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

இலங்கையில் தற்பொழுது வருடாந்தம் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் பாம்புக்கடிக்காக சிகிச்சை பெறுகின்றனர். கி-கி

இந்தியாவில்

## வெப்பத்திற்கு பலியாகுவோர் தொகை தினமும் அதிகரிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் கடும் வெப்பத்திற்கு பலியாவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து வருவதோடு தற்போது வெப்பத்திற்கு பலியானோர் தொகை 350 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் வட இந்தியாவில் 70பேர் பலியாகியுள்ளனர் உத்தரப் பிரதேசத்தில் 63 பேரும் ஜெய்பூரில் 9பேரும் ஆந்திர பிரதேசத்தில் 3பேரும் உயிரிழந்தனர்.

தற்போது தலைநகர் டில்லியில் 50 டிகிரி செல்சியஸ் வெப்பம் நிலவுகிறது இந்த நிலைமை இன்னும் தொடரும் எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

இதுவரை உத்தர பிரதேசத்தில் 161 பேரும் ராஜஸ்தானில் 69 பேரும் வெப்பத்திற்கு பலியாகியுள்ளனர். கே.சி

## வாய்க்கால் புனரமைப்பு

(சாவகச்சேரி)

மட்டுவில் விளைவேலிப் பகுதியில் உள்ள வாய்க்கால் ஒன்று அப்பகுதிக்கிராமத்தவர்களின் முயற்சியால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

கல்வயல் பகுதி கிராம சேவகர்திரு, எஸ். தில்லையம்பலம் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமத்தவர்கள ஒன்றிணைந்து இப்பாரிய சிரமதானத்தை மேற்கொண்டுள்ளனர், 155

## சிரமதானம்

(நெல்லியடி)

தீருவில் மாவீரர் துயிலும் இல்லம், வல்வெட்டித்துறை இந்து மகளிர் கல்லூரி, மாணவர்கள், ஆசிரியர்களினுல் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இச் சிரமதானத்தின் போது உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி மாணவர்கள். ஆசிரியர்கள் உட்பட இன்னும் பலர் சிரமதானத்தில் ஈடுபட்டனர். -160

0 0 0

(யாழ்ப்பாணம்)

மாணவர் எழுச்சிநாள் சிரமதானமாக வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் வைத்திய சாலையை அம்பன் அ, மி. க. பாடசாலை மாணவர்கள் துப்பரவு செய்தனர். மருதங்கேணி இ. த. க, பாடசாலை மாணவர்கள் மருதங்கேணி வைத்தியசாலையை துப்பரவு செய்தனர்.

உடுதுறை மாவித்தியாலய மாணவர்களும், ஆழியவளை அ.த.க.க பாடசாலைமாணவர்களும் செம்பியன்பற்று அ.த.க பாடசாலை மாணவர்களும், தாளையடி றே. க.த.க. பாடசாலை மாணவர்களும், பெதுமக்களுமாக வீதி புனரமைப்பு வேலைகளை சிரமதானம் மூலம் செம்மைப்படுத்தினுர்கள்:

## குடிசை தீக்கிரை

(நெல்லியடி)

கடுங்காற்று வேகத்தினுல், சமையலறையிலிருந்து பரவிய தீ, ஒரு மண் குடிசையை முற்றுக எரித்து நாசமாக்கியது. இதனுல் எண் பதினுயிரம் ரூபா பெறுமதியான பொருட்களும் தளபாடங்களும் உணவுப் பொருட்களும் சேதமடைந்தன.

இச் சம்பவம் அண்மையில் கரவெட்டி கிழக்கு காட்டுப்புலம் என்னுமிடத்தில் நடைபெற்றது. -160

கஷ்ட நிவாரணம்

## ஆசிரியர்களுக்கு வழங்கபடவில்லை

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர்களுக்கான கஷ்ட நிவாரணப்படி நிதிக்கொடுப்பனவு இன்றுவரை வழங்கப்படாததையிட்டு ஆசிரியர்கள் அதிருப்தி தெரிவித்தனர்.

ஏனையபல அரசாங்க திணைக்களங்களைச்சேர்ந்த அரசஊழியர்களுக்கு இக்கஷ்ட நிவாரணப்படி கடந்த 1990 ஆம் ஆண்டு வழங்கப்பட்டதுகுறிப்பிடத்தக்கது. 154-கி

## இலவச மருத்துவ சேவை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சாயிசமித்தியினர் மந்துவில் கிராமத்தில் மருத்துவ சேவை ஒன்றை மந்துவில் ஸ்ரீபாரதிவித்தியாலயத்தில் வைத்து மேற் கொண்டனர்.

விசேடவைத்திய நிபுணர்கள் அடங்கியகுழுவினரின் இவ்வைத்தியப் பரிசோதனையினுல் மேற்படி கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானேர் பயன் பெற்றனர் சாவகச்சேரி சாயிசமித்தியின் தலைவர் டாக்டர் திரு கருணுகரன் முயற்சியால் இச்சேவை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

# கொழும்பில் முக்கிய பகுதிகளுக்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பில் குண்டு வெடிப்பு நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் இடங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாக தகவல் தொடர்பு உல்லாசப் பயணத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையப் பிராந்தியத்தில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்தே மேற்கண்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளையில் குறிப்பிட்ட விமான நிலையத்திற்கு செல்லும் வாகனங்கள், அவ்வகனங்களில் பயணம் செய்வோர் படையினரால் நுணுக்கமாக சோதனையிடப்படுவதாகவும் மேலும் அறியப்படுகிறது. -க-ரி

# கொழும்பிலுள்ள தமிழரும் ஈழக் கோரிக்கையை ஆதரிக்க தயாராகவுள்ளனர்

(கொழும்பு)

'ஈழம் கோரிக்கையை கொழும்பிலுள்ள பெரும்பாலான தமிழர்களும் ஆதரிக்கத் தயாராகவே இருக்கிறார்கள்'' இவ்வாறு போல் தேவராயகம் என்ற பெண் பத்திரிகையாளர் பி.பி.ஸி.க்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார், அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்:

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தமிழர்களை படையினர் எதுவித காரணமுமின்றி திரைமும் கைதுசெய்யும் காட்சியையே தற்போது காணக்கூடியதாக இருக்கிறது.

சுகவீனம் காரணமாக அமெரிக்காவிலிருந்து வந்த எனது தம்பியை பொலிசார் எதுவித காரணமுமின்றி கைது செய்து மூன்று நாட்கள் தடுத்து வைத்தார்கள். அவரை விடுதலை செய்வதற்கு நான் பெரும்பாடு பட்டு விட்டேன். அவரைப் பார்ப்பதற்காக, நான் பலதடவை பொலிஸ் நிலையம் சென்றபோது அப்பாவித் தமிழ் இளைஞர்கள் பெருமளவில் அங்கு அடைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பெரும் வேதனையடைந்தேன்.

தமிழர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்ற எண்ணமான நோக்கம் சந்திரிகா அரசுக்குக் கிடையாது. ஆகவே எமது போரை நாமே நடத்தியாக வேண்டும் என்பது எனது சொந்தக்கருத்து.

தமிழர்கள் அனைவரும் ஒன்று பட்டு அரசின்மீது அழுத்தம் கொடுக்கவேண்டும். நான் விடுதலை புலிகள் அமைப்பில் சேரவிரும்பவில்லை. ஆனால் அரசைவிட விடுதலைப் புலிகள் பக்கமே இருக்கிறேன். வட பகுதியில் அவர்கள் தான் எங்களைப் பாதுகாக்கிறார்கள் கொழும்பில்லைதாகும் தமிழர்கள அனைவரும் 'ஈழம்' என்றகோரிக்கையை ஆதரிக்க தயாராகவே இருக்கிறார்கள் என்றும் கூறினார். வி-ரி

## திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறவிருந்த தமிழீழ கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் தையல் கலை காட்சியும், சான்றிதழ் வழங்கலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை 18ம்திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. முன்னர் அறிவித்த நிகழ்ச்சி ஒழுங்கின் படி நிகழ்வுகள் நடைபெறுமென்றும் அறிவிக்கப்படுகிறது. -ரி

## யாழ். மாவட்டத் தபால்கள் 'லங்கா முடித்த'வில் அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு உணவுப் பொருட்களை ஏற்றிவரும் 'லங்கா முடித்த' கப்பலில் கொழும்பில் தேங்கியிருக்கும் யாழ் மாவட்டத்துக்குரிய தபால்களை அனுப்பி வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இதுபற்றிய தகவல் ஒன்றை அஞ்சல் நாயகம் திருமதி எச். எம். எம். எஸ். கொட்டகதெனியா வடமாகாண உதவி அஞ்சல் நாயகத்துக்கு அறிவித்துள்ளார்.

தபால்களை கிழித்து பரிசோதனை செய்யவேண்டாமென்றும் தபால் பார்சல்களை வேண்டுமென்றால் உடைத்து பரிசோதனை செய்யலாமெனவும் அஞ்சல் நாயகம் திருமதி கொட்டகதெனியா பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழுவிற்கு அறிவித்திருப்பதாக கொழும்புத் தகவல் ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

இதேவேளை கொழும்பு அஞ்சல் திணைக்கள தரம்பிரிக்கும் அலுவலகத்தில் யாழ். மாவட்டத்துக்கான சுமார் 450 வரையிலான தபால் பொதிகள் தேங்கியுருப்பதாக கொழும்பில் இருந்து வடமாகாணத்துக்கு கிடைத்த தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 170ரி

## 10 லட்சம் ரூபா சன்மானம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பனை மரத்தில் ஏறுவதற்கு பொருத்தமான பொறியை உருவாக்குபவர்களுக்கு பத்து லட்சம் ரூபா சன்மானம் வழங்குவது சம்பந்தமான விபரங்கள் நாளை (18-06-05) ஈழநாடு வார மலரில் வெளியாகிறது.

## மனிதஉரிமை செயற்பாட்டுகுழு நியமிக்கப்படவில்லை

[லண்டன்[

மனித உரிமை செயற்பாட்டுக் குழுவை தான் நியமித்திருப்பதாக ஜனாதிபதி திருமதி சந்திரிகா அறிவித்திருந்த போதிலும் இவ்வாறான ஒரு குழு இதுவரை நியமிக்கப்படவில்லையென்று பி. பி ஸி அறிவித்துள்ளது

மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதற்காக தம்மால் நியமிக்கப்பட்ட மனித உரிமை செயற்பாட்டுக் குழுவுடன் ஒத்துழைக்கும்படி. ஜனாதிபதி திருமதி சந்திரிகா நேற்று முன்தினம் வியாழக்கிழமை முப்படை அதிகாரிகளுக்கும் அறிவித்திருந்தார். ஆனால் மனித உரிமை செயற்பாட்டுக்குழு இன்னும் நியமிக்கப்படவில்லையென்று மனித உரிமைச் செயலாளர்கள் தெரிவித்ததாக பி. பி. ஸி மேலும் தெரிவித்தது. வி-ரி

## புலிகளுடன் மகனை இணைத்த தாய்

(யாழ்ப்பாணம்)

''முள்ளி வீதி அரியாலையைச் சேர்ந்த திருமதி கந்தசாமி லீலாவதி என்பவர் தனது மகனான கந்தசாமி என்பவரைத் தமிழீழ மண்மீட்புப் போரிற்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணியில் நேற்று முன்தினம் இணைத்துள்ளார்.''

## மேலும் 5ராணுவமுகாம்கள் மூடப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டுப் பகுதிகளில் இராணுவம் அமைத்திருந்த ஐந்து முகாம்களை மூடிவிட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காயங்கேணி, மாவடியோடை, புழுகுநாவை தரவைக்குளம், அம்பந்தானைவெளி ஆகிய காட்டுப் பகுதிகளில புதிதாக இராணுவம் அமைத்திருந்த முகாம்களை கடந்த செவ்வாய்க்கிழமை முற்றாக மூடிவிட்டு, பெரிய முகாம்களுடன் இணைந்து கொணடு விட்டதாக கூறப்படுகின்றது.

இதேநேரம் கிழக்கு மாகாணத்தின் காட்டுப் பகுதிகளில் புதிதாக இராணுவம் அமைத்திருந்த பல முகாம்களை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்ததன் காரணமாகவே இராணுவம் காட்டுப் பகுதிகளில் அமைத்திருந்த புதிய முகாம்களை படிப்படியாக மூடிவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. -வி-ரி

## நீர்வேலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முகாமில் ஆயிரககணக்கான மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

பல தொண்டர்கள் மிகுந்த அக்கறையுடன் அகதிகளை வரவேற்று ஆதரவளித்து உதவி செய்வதைக் காணக் கூடியதாக உள்ளது. 90-ரி

## அச்சுவேலி பகுதியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற மோதலையடுத்து விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாது பிற்பகல் 2 மணிக்கு இராணுவம் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கி முகாமிற்கு சென்றடைந்தது.

இந்நடவடிக்கையின் போது இராணுவ அணி பொதுமக்களின் உடமைகள், வீடுவாசல்களுக்கு பலத்த சேதத்தை விளைவித்துள்ளது.

வீதிகளிலிருந்த மதில்கள், வீடுகள் சில இராணுவத்தினர் டாங்கிகளினால் இடித்துத் தள்ளியுள்ளனர்.

கடைகள், வீடுகள் யாவும் உடைத்து பெறுமதி வாய்ந்த பொருள்கள் இராணுவத்தினரால சூறையாடப்பட்டுள்ளன. எஞ்சிய பொருள்கள் சேதமாக்கபபட்டுள்ளன. பல வீடுகள் உடைத்து நொருக்கப்பட்டுள்ளன. மின்தட்டுத் தொழிற்சாலை, பேக்கரி மற்றும் இரண்டு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இத்தாக்குதல்களில் 50 க்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன, வலிகாமம வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அச்சுவேலி தலைமைக் காரியாலயம், கூட்டுறவுச் சங்க பேக்கரி என்பனவும் பலத்த சேதமடைந்தன,

அதிகாலை வேளை இடம்பெற்ற இந்நடவடிக்கையினால் பேக்கரியில் பாண் தயாரிப்பதற்காக தயார் செய்யப்பட்ட மூன்று மூடை மாவு முற்றாக சேதமடைந்தது. பேக்கரியில் இருந்த 2 பீப்பா தேங்காய் எண்ணெய் இராணுவத்தினரால் நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின்போது போது அச்சுவேலி, ஆவரங்கால், தோப்பு, நவக்கிரி, விளான், புன்னாலைக்கட்டுவன், பத்தமேனி, அச்சுவேலி வடக்கு, வல்லை, தொண்டமானாறு பகுதிகளை உள்ளடக்கி சுமார் 200 க்கும் மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன. வல்லைப் பாலப்பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல்களினால் பாலப் பகுதியில் சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளன

மோதல் இடம்பெற்ற பகுதிகளில் நிலத்திற் சில இடங்களில் இரத்தக் கறைகள் பெரிய அளவிற் காணப்படுகின்றன. 170-166-90-51-ரி

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை யங்ஸ்ரேயல் விளையாட்டு கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில நடாத்தும 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம் வருமாறு:

புங்குடுதீவு அம்பாள் எதிர் நாவாந்துறை சென் மேரிஸ் மோதுகின்றன,

0 0

வலிகிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டங்கள் வருமாறு:

இன்றைய முதலாட்டத்தில் விண்மீன் எதிர் அண்ணா ஸ்ரார், வைக்கிங்ஸ் எதிர்கலைவாணி, 3வது ஆட்டத்தில் ஸ்ரேயல் எதிர் கவி வி-ரி

## கடற்படைத் தாக்குதலில் இருமீனவரைக்காணவில்லை

(முல்லைத்தீவ)

முல்லைத்தீவுக் கடல் பகுதியிலிருந்து கடற்படையினர் தாக்கியதில் இரு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர், மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் நடந்துள்ளது.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கடல பகுதியில் கடற்படையினர் இத் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர்.

ம'சல்வின் காண்டீபன்; கண்மணி ஆகிய மூவருமே படுகாயமுற்றவர்களாவர். -கி-ரி

## வடபகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

யினர் தமது பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்ததாகவும் அவர் சொன்னார்.

பலாலி முகாமிலிருந்து முன்னேறிய படையினர் தமது பாதுகாப்பு எல்லையை விஸ்தரித்துக் கொண்டு அச்சுவேலியின் சில குறிப்பிட்ட பகுதிகள்வரை நகர்ந்ததாகவும்.

தற்பொழுது புதிய நிலைகளின் பாதுகாப்பை பலப்படுத்தும் பணியில் படையினர் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவித்த இராணுவ பேச்சாளர், புலிகளை கூடியளவுக்கு போருக்கு இழுப்பதே இந்த இராணுவ நடவடிககையினநோக்கமெனவும் தெரிவித்தார். கி-ரி

## சுப்பசொனிக

(1-ம் பக்கத் தொடர்ச்சி

தாக்குதல்களை நடத்தின.

காலை யாழ் குடாநாட்டு வான் பரப்பினூடாக சுப்பசொனிக் விமானம் பறந்து சென்றதையடுத்து மக்கள் பெரும் பீதியுற்று காணப்பட்டனர்.

அச்சுவேலிப் பகுதியில் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தி விட்டு சுப்பசொனிக் விமானம் யாழ் நகரை அண்டிய கரையோரப் பகுதியினூடாக பேரிரைச்சலுடன் சென்றது. (90-170-51-ரி)

## காலையிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுவேலி அண்ணா வீதியை சேர்ந்த ரி. இராசையா (வயது 65) என்பவரே இச் சம்பவத்தில் பலியானவராவார்.

எஸ். குகனேஸ்வரன் (20 வயது), வ. தெய்வேந்திரன் (48 வயது), ஆவரங்கால், த. காண்டீபன் (23 வயது), ஆ. நாகன் 65 வயது), தி. கோகிலாமணி (வயது 50) பத்தமேனி அச்சுவேலி, எஸ்.சுரேஸ்குமாரி (வயது 21) ஆஸ்பத்திரி வீதி, தோப்பு அச்சுவேலி, பி. சுந்தரம் (வயது 54) அச்சுவேலி வடக்கு, எம். மார்க்கண்டு. பாரதி வீதி அச்சுவேலி, சாந்தம் தர்மலிங்கம் (வயது 49) நாவற்காடு அச்சுவேலி, பி. சோபனா (வயது 20) ஆவரங்கால் புத்தூர் ஆகியோர் உட்பட பலர் காயமடைந்தனர்.

ஷெல் தாக்குதல்களினால் கால்நடைகள் பலவும் இறந்துள்ளன. வாழைத்தோட்டங்களும் ஷெல்லினால் அழிந்துள்ளன. 170-166-90-51-ரி

## இராணுவத்தினர்

[1-ம் பக்கத்தொடர்ச்சி[

வும் இராணுவப் பேச்சாளரை ஆதாரம் காட்டி தெரிவித்தது.

இதேவேளை அச்சுவேலி-பத்தமேனிப் பகுதியில் வயோதிபர் ஒருவர் இராணுவத்தினரால் நேற்று பிடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இவ் வயோதிபரின் நிலைகுறித்த தகவல்கள் எதுவும்நேற்று வரை கிடைக்கவில்லை. க-ரி

இருவர் கதைக்கையில்
மூன்றாமவன்
நித்திரையாயிருப்பான்
அவன்
செவிகள் மட்டும் விழித்திருக்கும்!
சேதிகள் செவியைத் சேர்ந்தால்
உங்கள்
வீதிகளிற் குண்டு விழும் !!

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683613.